# 7 சமூகப் பாதுகாப்பை உருவாக்குவோம்


குறித்ததொரு பூகோளப் பிரதேசத்தினுள் ஒவ்வொருவருக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு கூட்டாக வாழுகின்ற ஆட்தொகுதி சமூகம் எனப்படும். ஒரு சமூகத்தின் சீரான இயக்கத்தினை உறுதிப்படுத்துவது சமூக பாதுகாப்பு என்று சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்த முடியும். எந்தவொரு சமூகத்தினதும் சீரான இயக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பல உள்ளன. அவற்றுள் பழக்கவழக்கங்களையும், சம்பிரதாயங்களையும் பின்பற்றல், சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்தல் அவற்றைப் பாதுகாத்தல், சமய விழுமியங்களை மதித்தல், பொருளாதார ஸ்திரத் தன்மையை உருவாக்கல், உயிர் மற்றும் உடமைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் போன்றன பிரதானமானவைகளாகும். சமூகப் பாதுகாப்பில் தாக்கம் செலுத்தும் பல்வேறுபட்ட நிறுவனங்களும் சேவைகளும் உள்ளன. எந்த ஒரு நாட்டிலும் நிரந்தர அபிவிருத்தியை ஏற்படுத்த சமூகப் பாதுகாப்பு அத்தியாவசியமாகும். இவ்வலகினைச் சிறப்பாகக் கற்பதன் மூலம் உங்களுக்குக் கிடைக்கும் தேர்ச்சியானது உங்கள் பிரதேசம், மாகாணம், மற்றும் நாட்டைப் போன்று முழு உலகிலும் நீடித்த நிரந்தர அபிவிருத்தி ஏற்படக் காரணமாக அமையும்.

## 7.1 சமூகத்துக்கும் தனி நபருக்கும் இடையிலான தொடர்பு

மனிதர்கள் பலரை உள்ளடக்கியதொரு தொகுதியே சமூகமெனச் சுருக்கமாகக் கூறமுடியும். ஏதாவதொரு பூகோளப் பிரதேசத்தில் நிரந்தரமாக வதியும் பல்வேறுபட்ட இனங்கள், தமது பல்வேறுபட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகக் கூட்டாகச் செயற்படுவது ஒரு சமூகத்தின் அடிப்படைப் பண்பாகும். ஒரு சமூகம் உருவாகும் முறையை அவதானிப்போம்.


தனிநபர்


குடும்பம்


சமூகம்

சமூகத்தின் மிகச் சிறிய பிரிவு குடும்பமாகும். பல குடும்பங்கள் ஒன்று சேர்வதன் மூலம் ஓர் சமூகம் உருவாகின்றது என்பது உங்களுக்குத் தெளிவாகியிருக்கும். சமூகம் உருவாகுவது தனிநபர்களாலேயே என்பது மேற்படி படங்கள் மூலம் நீங்கள் விளங்கியிருப்பீர்கள்.

எந்தவொரு சமூகத்திலும் அவற்றிற்கே உரித்தான பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் ஒழுங்கமைப்புக்கள் இருப்பதைக் காணமுடிகிறது. பல்வேறுபட்ட சமூகங்களுக்கிடையேயான தனித்துவத்தை வெளிப்படுத்தும் காரணிகளாக இவற்றைக் காணமுடிகிறது. சகல சமூகங்களும் அவற்றிற்கே பொதுவான ஒழுக்க விழுமியங்கள், இணக்கங்கள் மற்றும் நேரடியான உடன்பாடுகள் ஆகியவற்றுக்கு உரித்தைக் கொண்டுள்ளன. இதனடிப்படையில் ஒரு சமூகத்தில் பல்பிரிவுகளையும் உப சமூகங்களையும் காண முடிகிறது.

உதாரணமாக கிராமிய, நகர, சிங்கள, தமிழ் , முஸ்லிம், பௌத்த, கிறிஸ்தவர், இஸ்லாமியர் , இந்துக்கள் போன்ற உப சமூகங்களைக் காண முடிகிறது.



7.1 கிராமியச் சமூகம்



7.2 நகர சமூகம்

தற்கால சமூகத்தில் மனித தேவைகள் விரிவடைந்துள்ளன. இதனால் எந்தவொரு நபரும் தனிமையாக வாழ முடியாது. தத்தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒவ்வொருவரிடமும் தங்கி வாழவேண்டிய நிலை ஏற்படுவதோடு பல்வகைப்பட்ட சமூக நிறுவனங்களினது ஒத்துழைப்புக்களும் அவசியமாகின்றன. எனவே சமூகம் விரிவடைந்து முழு உலகும் ஒரே சமூகமாக மாற்றமடைந்து வருகின்றது. இதனூடாக தனி நபருக்கும் சமூகத்திற்கு மிடையிலான பரஸ்பர தொடர்புகள் பற்றிய தெளிவு ஏற்படுகின்றது.

## 7.2 சமூகக் காப்பு

சமூகக்காப்பு எனப்படுவது உச்ச அளவிலான பாதுகாப்பை வழங்குவதாகும். மிருகத்தைப் போலவே மனிதனும் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்துகின்றான். மாஸ்லோ எனும் உளவியலாளர் தனது மனிதத்தேவைக் கோட்பாட்டில் பாதுகாப்பானது மனிதத்தேவைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமூகக்காப்பு எனக் கருதப்படுவது சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகும். ஒவ்வொருவரினதும் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் பட்சத்தில் அதன் மூலம் முழு சமூகத்தினதும் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது. மனித சமூகத்தில் காணப்படும் பழக்கவழக்கங்கள், விழுமியங்கள், சட்டதிட்டங்கள் என்பவற்றை ஏற்று அவற்றுக்கமைய வாழ்வதனால் சமூகத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது. பிரபல சமூக ஆய்வாளரான ஸ்டேமன் இது தொடர்பாக தமது சமூகக் கடப்பாடுகள் எனும் எண்ணக்கருவில் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

> "சமூக மயமாக்கல் எனப்படுவது ஒருவர் சமூகத்தின் அங்கத்துவத்தைப் பெறுவது அல்லது சமூகத்தின் ஏதாவதொரு குழுவின் அங்கத்துவத்தை பெறும் செயலொழுங்காகும். அது தனிநபர்கள் தம் சூழலிலுள்ள கலாசாரத்தின் அல்லது உபகலாசாரத்தின் பொறுப்புகளை பழக்க வழக்கங்களை மதித்தலின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்"
>
> **ஸ்டேமன்**

சமூகக் காப்பை ஏற்படுத்துவது தொடர்பில் தனிநபர் நடத்தைகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. தனிநபர் நடத்தைகள் பின்வரும் இரண்டு செயன்முறைகளின் மூலம் இசைவாக்கம் அடைகின்றன.

- சிறந்ததொரு சமூகத்தின் சிறப்பியல்புகளுக்கேற்ப தனிநபர் மாற்றமடைதல்.

- தனிநபர்களின் சிறந்த எதிர்பார்ப்புகளுக்கேற்ப சமூகத்தை மாற்றிக் கொள்ளுதல்.


மேற்கூறப்பட்டவாறு தனிநபர் நடத்தைகளை வடிவமைத்துக் கொள்வதன் மூலம் சமூகக்காப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது. இதனை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்வதற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.

நீங்கள் தற்பொழுது கல்வி கற்கும் பாடசாலை ஒரு வகைச் சமூகமாகும். 9ஆம் தரத்தினை அதன் ஓர் உப சமூகமாகக் கருதமுடியும். இவ்வுப சமூகம் ஆசிரியர் அல்லது ஆசிரியை மற்றும் உங்களது சகோதர மாணவ, மாணவிகளை உள்ளடக்கிய அங்கத்தவர்களைக் கொண்டு உருவாக்கப்படுகிறது.பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர் என்ற வகையில் நீங்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கவிழுமியங்கள் மற்றும் சட்டதிட்டங்கள் உள்ளன. உரிய நேரத்திற்குள் பாடசாலைக்கு சமூகமளித்தல், குறிப்பிட்ட நேரத்துக்குள் பாடசாலையில் தங்கி இருத்தல். பாடசாலை வளங்களைப் பாதுகாத்தல், முறையாக பாடசாலை சீருடையை அணிந்திருத்தல் ஆசிரியர்களை மதித்தல் போன்றன சில உதாரணங்களாகும்.

மேற்கூறப்பட்ட சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுக்க விழுமியங்கள் பொதுவாக குறித்த வகுப்பினுள் நடைமுறைப்படுத்தப்படுவதனால் வகுப்பின் சமூகக்காப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது. எனினும் ஒரு மாணவர் இதற்குப் புறம்பாக செயற்படும் பட்சத்தில் அது அவ்வகுப்பு எனும் சமூகத்தின் நன்நடத்தையில் களங்கத்தை ஏற்படுத்தும். அப்போது உங்கள் வகுப்பின் பாதுகாப்பு பாதிக்கப்படும். இது முழுப் பாடசாலையினதும் பாதுகாப்பில் பாதிப்பினை ஏற்படுத்தும்.

## 7.3 சமூகக்காப்பை ஏற்படுத்தும் நிறுவனங்கள்

தனிநபர்கள் சமூகத்தில் நிலவுகின்ற விடயங்களைத் தமது ஆளுமைப் பண்பாக மாற்றிக் கொள்ளுதல் சமூகமயமாக்கம் எனக்கருதப்படும். இதனடிப் படையில் சமூக மயமாக்கத்தின் மூலம் சமூகத்தின் காப்பை ஏற்படுத்தப் பங்களிப்பு செய்யும் பிரதான நிறுவனங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.




நீங்களும் சமகாலத்தில் ஒரு குடும்பத்தின், பாடசாலையின்மற்றும் ஏதாவதொரு சமய நிறுவனத்தின் அங்கத்தவராவீர்கள். நீங்கள் ஏதாவ தொரு சமூகசேவை நிறுவனத்தின் அங்கத்தவராகவும் இருக்கக் கூடும். அந் நிறுவனங்களின் அங்கத்தவர் என்ற வகையில் உங்களுக்கும் சமூகக்காப்பை உறுதிப்படுத்துவதற்குரிய பொறுப்புக்கள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் பல உள்ளன.

## 7.3.1 சமூகப்பாதுகாப்பை உருவாக்கும் காரணியான குடும்பத்தின் முக்கியத்துவம்

ஒருவர் சமூகத்திற்குள் பிரவேசிக்கும்போது அதற்கான அடிப்படைப் பயிற்சியைக் குடும்பத்தின் மூலம் பெறுகிறார். குடும்ப அங்கத்தவருக்கிடையே சிறந்த தொடர்பாடல்கள், நற்பண்புகள், சிறந்த சிந்தனைகள் ஏற்படுத்துவதனூடு நற்பிரசைகளை உருவாக்கம் செய்ய முடியும். இதன் மூலம் இவர்கள் சமூகத்தின் நலனுக்காகச் செயற்படக் கற்றுக் கொள்ளவும் முடிகிறது. குடும்பத்தின் தொடர்புகள் நலிவடையும்போது சமூகத்திற்குப் புறம்பான பழக்கவழக்கங்களை உருவாக்கிக் கொள்வர். இது சமூகப் பாதுகாப்பிற்குத் தடையாக அமையும்.


குடும்பத்தின் மூலம் அன்பு, அரவணைப்பு, கருணை என்பன முறையாகக் கிடைக்கப்பெறும் பட்சத்தில் ஒருவரிடம் சுய நம்பிக்கையும் பாதுகாப்பும் ஏற்படும். இது நேரடியாகச் சமூகப் பாதுகாப்பை உருவாக்கும் காரணியாக அமையும்.


உரு 7.3 மகிழ்ச்சியான குடும்பம்

ஒரு நபரின் அல்லது சமூகத்தின் பாதுகாப்பின் மீது குடும்பம் என்ற சமூகப் பிரிவின் பண்புகள் செல்வாக்கினை ஏற்படுத்துகின்றன என்பது தெளிவாகின்றது.

**குடும்பமொன்றில் சமூகப்பாதுகாப்புக்காக வழங்கக்கூடிய சிறந்த செய்தி நாம் என்ற உணர்வை விருத்தி செய்வதாகும்.**

இதனடிப்படையில் சமூகப்பாதுகாப்பிற்காகக் குடும்பமொன்றினால் மேற்கொள்ள வேண்டிய பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றன.




இப் பண்புகள் உரிய முறையில் குடும்பம் ஒன்றினூடாக ஒருவருக்கு கிடைப்பதன் மூலம் ஒருவரிடமிருந்து மீண்டும் சமூகத்திற்குக் கிடைக்கின்றது. இச்செயற்பாட்டொழுங்கின் பெறுபேறாகச் சமூகப்பாதுகாப்பு உருவாகின்றது எனலாம்.

### 7:3:2 சமூகக்காப்புக்கான பாடசாலையின் பங்களிப்பு


7.4 ஆரம்ப பிரிவு வகுப்பறை

சமூகக்காப்பை உருவாக்குவதற்கு அவசியமான பின்னணியை உருவாக்கும் பிரதான நிறுவனமாக பாடசாலை விளங்குகின்றது. பாடசாலையில் நீங்கள் பெற்றுக் கொள்ளும் திறன்கள், மனப்பாங்குகள் மற்றும் பழக்க வழக்கங்கள் போன்றன உங்களைச் சிறந்த பிரசையாக வாழ்வதற்கு துணை செய்கின்றன.அவை பாடசாலையிலும் பின்னர் சமூகத்திலும் உங்களது மட்டுமன்றி ஏனையவர்களினது நலன்களுக்கும் ஏதுவாக அமைகின்றன.

**பாடசாலை மூலம் சிறந்த பழக்கவழக்கங்கள், மனப்பாங்குகள், திறன்கள் என்பன மேம்படுத்தப்படுவதானது சமூகக்காப்புக்குக் காரணமாகின்றது.**

பாடங்கள் தொடர்பாக அறிவு, விளக்கம் என்பன கிடைக்கப்பெறுவது போன்றே மனிதனுக்குத் தான் வாழும் சமூகத்தில் உரிய இடத்தை பெற்றுக் கொள்வதற்கும் தன்னால் சமூகத்துக்கு ஆற்றப்படவேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமான அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகளை விருத்தி செய்து கொள்வதற்கும் பாடசாலை துணை செய்கிறது. அது மனிதனை சமூகத்திற்குப் பயனுள்ள நற்பிரசை ஒருவனாக ஆக்குவதற்கு நேரடியாகப் பங்களிப்புச் செய்கிறது. சமூகப் பாதுகாப்புக்குப் பாடசாலையால் ஆற்றப்படும் பங்களிப்பை பின்வருமாறு விளங்கிக் கொள்ள முடியும்.

**பாடசாலையினால் நிறைவேற்றப்படும் காரியங்கள்**

- பாட அறிவும், விளக்கமும் கிடைத்தல்.
- மாணவருக்குள்ளே இருக்கும் திறன்களை அறிவதும் அவற்றை மேம்படுத்தலும்
- ஆளுமை விருத்திக்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படல்
- சமூகமாகச் செயற்பட பயிற்சி அளித்தல்
- சமநிலையை மதித்தல்
- உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காகக் பயிற்றுவித்தல்
- ஆக்கத்திறனை மேம்படுத்தல்
- கலாசாரத்தை ஒப்படைப்பதும், பாதுகாத்தலும்
- சமூகச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைத்தல்
- ஒழுக்கமுள்ள சமூகப் பிரிவினரை உருவாக்குதல்


இலவச பாடநூல் விநியோகத்திற்காக

**செயற்பாடு I**

மேலே குறிப்பிடப்பட்டிருப்பது பாடசாலையின் மூலம் மேற்கொள்ளப்படும் ஒருசில பணிகளாகும். இதற்கு மேலதிகமாக மேலும் சேர்த்துக் கொள்ள முடியுமான பணிகள் கொண்ட புதிய குறிப்பேட்டைத் தயாரியுங்கள்.

### 7.3.3: சமூகக்காப்புக்கான சமய நிறுவனங்களின் பங்களிப்பு

"சமயம் எனப்படுவது சமூகப் பிணைப்பை விருத்தி செய்யக்கூடிய சமூக நடத்தைகள் மற்றும் ஒழுக்கவிழுமியங்களைப் பலப்படுத்தும் நிறுவனமாகும்.

**பி. மெலினொவிஸ்கி**

மேற்கூறப்பட்ட கருத்தின்படி சமூகக்காப்பிற்கு சமூக நிறுவனங்கள் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதனை நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பீர்கள்.




உரு 7.5 பல்வேறு மத வழிபாட்டுத் தலங்கள்

அனைத்து மதங்களும் மனிதர்களைச் சமூகத்தில் நற்பிரசைகளாகவும் ஒற்றுமையாகவும், ஒத்துழைப்போடும், சகவாழ்வுடனும் வாழ்வதற்கான பயிற்சியையே வழங்குகின்றன. அதனடிப்படையில் சமய நிறுவனங்கள் சமூகத் தேவைகள் பலவற்றை நிறைவு செய்வதற்குப் பங்களிப்புச் செய்கின்றன என்பதனை நீங்கள் விளங்கிக் கொள்ளலாம்.

சமய நிறுவனங்கள் சமூகக்காப்புக்குப் பங்களிப்புச் செய்யும் விதம் பின்வருமாறு

1. சமூகத்தின் சிறந்த நிலைப்பாட்டிற்குத் தேவையான விழுமியங்களை அறிமுகப்படுத்தல்.
2. வாழ்க்கை தொடர்பாகச் சரியான நோக்கை உருவாக்குதல்.
3. அறிவியல் விருத்தியை ஏற்படுத்தல்.
4. மற்றையவர்களுக்கு அசௌகரியம் ஏற்படாதவாறு செயற்படப் போதித்தல்
5. ஒத்துழைப்புடன், பரஸ்பர புரிந்துணர்வுடனான உதவிகளைச் செய்யப் பழக்குதல்.
6. சமய ஒழுக்கவிழுமியங்கள், சம்பிரதாயங்களை மதிக்கவும் மற்றும் பாதுகாக்கவும் பயிற்சி அளித்தல்.
7. சமயங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு வேலைத்திட்டங்கள் மூலம் தேசிய நல்லிணக்கத்தைத் தோற்றுவித்தல்.

## 7.3.4 சமூகக்காப்பிற்காக சமூக அமைப்புக்களில் இருந்து கிடைக்கப் பெறும் பங்களிப்புக்கள்

சாதாரண ஒரு சமூகத்தில் காணக்கூடிய சமூக அமைப்புக்கள் பல உள்ளன. அவற்றில் ஒருசிலவற்றைப் பார்ப்போம்.

சிறுவர் கழகங்கள், விளையாட்டுக்கழகங்கள், இளைஞர் கழகங்கள், சமுர்த்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், முதியோர் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள், மரணாதாரச் சங்கங்கள், நலன்புரிச் சங்கங்கள் போன்றன. இவ்வாறான அமைப்புக்கள் சமூகப் பாதுகாப்பிற்காக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. சமூக அமைப்புக்களின் அங்கத்துவத்தைப் பெறுவதன் மூலம் அச்சமூகத்தின் அங்கத்தவர்களுக்கிடையே ஏற்படும் கொடுக்கல் வாங்கல்களின் பெறுபேறாக மதிப்பும், பழக்கவழக்கங்களின் மேம்பாடும் ஏற்படுகின்றன.



உரு 7.6 சமூக அமைப்புகளும் சமூக பாதுகாப்புக்கு காரணியாக அமைகின்றன

சமூகத்தில் பிறக்கும்போது தமது உடல் நலத்தை மாத்திரம் கருத்தில் கொள்ளும் குழந்தை, வளர்ச்சியடையும்போது தான் சமூகத்தின் ஓர் அங்கத்தவராக ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமெனின் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்கவிழுமியங்களை மதித்து அவற்றிற்குக் கட்டுப் பட்டுச் செயற்படுவது அவசியம் என்பதைக் கற்றுக் கொள்வது சமூகம் எனும் நிறுவனத்தின் மூலமேயாகும்.

பல்வேறுபட்ட சமூக நிறுவனங்கள் அல்லது அமைப்புக்கள் மூலம் சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக வழங்கப்படும் பங்களிப்பை இனங்காண்போம்.

1. சிறந்த ஆளிடைத் தொடர்பை ஏற்படுத்துதல்
2. ஏனையோரின் கருத்துக்களை மதிக்கப் பழ்குதல்
3. ஏனையோரின் கருத்துக்களைச் செவிமடுக்கப் பழகுதல்
4. சிறந்த தலைமைத்துவத்தைப் பின்பற்றுதல்
5. தலைமைத்துவத்தை மதிக்கப் பழகுதல்
6. சமூகக் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை இனங்காணுதல்
7. சமூகத் திறன்களை விருத்தி செய்தல்
8. சட்டத்தை மதித்து நடக்கப் பழகுதல்

இவ்வாறான நடத்தைகளை சமூக நிறுவனங்கள் மூலம் தனி நபர்களுக்கிடையே விருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. இதன்மூலம் மனிதர்கள் சிறந்த முறையில் செயற்பட ஆர்வமூட்டப் படுவதனால் சமூகத்திலும் சிறந்த மாற்றங்கள் ஏற்படுகின்றன. இது சமூகப் பாதுகாப்புக்கு காரணமாக அமைகின்றது.

**செயற்பாடு II**

உங்களது பிரதேசத்தில் சமூகப்பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக நிறுப்வப்பட டுள்ள சமூக நிறுவனங்களைப் பெயரிட்டு அவற்றில் ஏதாவதொரு நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சேவையை விளக்குங்கள்.

## 7.4 : சமூகப்பாதுகாப்பை உருவாக்குவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ள கட்டமைப்பு

நாடு என்பது சிக்கலானதும் விரிவானதுமான ஒரு சமூகத் தொகுதியாகும். நாட்டினுன் சமூகப்பாதுகாப்பை ஏற்படுத்தும் அடிப்படைப் பொறுப்பு அரசாங் கத்திற்குரியது. அரசாங்கத்தினால் சமூகப்பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக பல்வகைப்பட்ட கட்டமைப்புக்கள் அல்லது வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இங்கு அரசு வகுக்கின்ற சட்டங்கள் மூலம் பிரசைகளின் நடத்தைகள் கட்டுப்படுத் தப்படுவது முக்கியமானதாகும்.

இதனடிப்படையில் சமூகப்பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக அரசு சமூகக் கட்டுப்பாடொன்றை உருவாக்குகின்றது.

**சமூகக்கட்டுப்பாடு எனப்படுவது யாதேனுமோர் சமூகத்தில் வாழ்பவர்களின் முரண்பாடுகள் மற்றும் மோதல்களைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயலொழுங்காகும்.**

சமூகக்கட்டுப்பாட்டு முறைகள் இரு விதமாக மேற்கொள்ளப்படுகின்றன.

i. சட்டம் மற்றும் சட்ட நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் முறைசார்ந்த சமூகக்கட்டுப்பாடு.

ii. சமூகப் பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் சமய செயற்பாடுகள் போன்றவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் முறைசாரா சமூகக்கட்டுப்பாடு.

## 7.5 முறைசார்ந்த சமூகக்கட்டுப்பாடு

முறையாகச் சமூகத்தை நிர்வகிப்பதற்காக அரசாங்கத்தினால் பல்வகைப் பட்ட அமைப்புக்கள் மற்றும் கொள்கைகள் வகுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றன. அவையாவன:

1. அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தியிருத்தல்.
2. சட்டம் மற்றும் சமாதானத்தை உருவாக்குவதற்காக பொலிஸ் மற்றும் இராணுவப் பிரிவுகள் தாபிக்கப்பட்டு இயங்குதல்.
3. நீதியை நிலைநாட்டுவதற்காக நீதிமன்றக் கட்டமைப்பொன்று தாபிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துதல்.
4. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல்வேறுபட்ட கொள்கைகளை வகுத்துள்ளமையும் நிறுவனங்களைத் தாபித்துள்ளமையும்

இவற்றில் பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் மூலம் சமூகப் பாதுகாப்பு ஏற்படுத்தப்படும் முறையைப் பற்றிப் பார்ப்போம்.

### சமூகக்காப்பினை ஏற்படுத்தும் நிறுவனமாக பொலிஸ் பிரிவு

அரசின் மூலம் விதிக்கப்படும் சட்டத்தைப் பாதுகாத்தல் மற்றும் சட்டத்திற்குப் புறம்பாகச் செயற்பட்டு சமூகப்பாதுகாப்பைச் சீர்குலைப்பவர்களைத் தடுத்து நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநிறுத்துவது பொலிசாரின் கடமையாகும்.

பொலிசார் தொடர்பாக திரு. இந்தமல்கொட அவர்கள் எழுதிய நூலில் **POLICE** எனும் சொல்லுக்கு இவ்வாறு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரின் பாதுகாப்புக்கென முதன் முதலில் ஒல்லாந்தர் காலத்தில் பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது.



பொலிஸ் உத்தியோக முத்திரை

| | | |
|---|---|---|
| **Polite** | - | **ஒழுக்கமான** |
| **Obedient** | - | **கீழ்படிவான** |
| **Loyal** | - | **நம்பிக்கையான** |
| **Intelligent** | - | **விவேகமான** |
| **Courageous** | - | **துணிகரமான** |
| **Efficient** | - | **வினைத்திறன் மிக்க** |

இவ் ஆங்கிலச் சொற்களின் முதல் எழுத்துக்களை ஒன்று சேர்த்தே **POLICE** என்ற சொல் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவிக்கின்றார். இச்சகல பண்புகளையும் ஒன்றிணைந்த பணியே பொலிசாரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

பொலிசாரினால் நிறைவேற்றப்படும் பிரதான பணிகள் சில கீழே குறிப்பிடப் பட்டுள்ளன.


உரு 7.7 பொலிசாரின் பணிகள்

- குற்றங்கள் மற்றும் ஏனைய சட்ட விரோதச் செயற்பாடுகளைத் தடுத்தல்
- சட்டத்தை மீறுபவர்களை சட்டத்தை மதிக்கப் பழக்குதல்
- சட்டத்தையும் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துதல்
- பொதுமக்கள் மற்றும் அவர்களின் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- சட்டரீதியாக அதிகாரத்திற்கு வந்த அரசாங்கத்தைப் பாதுகாத்தல்.
- சட்டத்தை அமுல்படுத்தும் ஏனைய நிறுவனங்களுக்கு உதவுதல்.

பொலிசாரின் இச்செயற்பாடுகள் பொதுமக்களின் நம்பிக்கையை ஈர்க்கக் கூடிய வகையில் அமைவதன் மூலம் சமூகப்பாதுகாப்பு ஏற்பட முடியும்.

## 7.6 சமூகப்பாதுகாப்பை ஏற்படுத்தும் நிறுவனமாக இராணுவம்

இலங்கையின் சமூகப்பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கென முப்படைகளும் பங்களிப்புச் செய்கின்றன. அவையாவன இராணுவம், விமானப்படை, மற்றும் கடற்படைஎன்பனவாகும்.

1949ஆம் ஆண்டு இராணுவப்படை சட்டத்தின்மூலம் இலங்கை இராணுவம் தாபிக்கப்பட்டது. 1972இல் அரசியல் யாப்பு மாற்றியமைக்கப்பட்டமையினால் அதன் பெயர் ''ஸ்ரீலங்கா இராணுவம்'' என மாற்றமடைந்ததுடன், உத்தியோகபூர்வ தொப்பிகள் மற்றும் இலட்சினைகளில் இருந்த குதிரைக்குப் பதிலாக சிங்கம் உள்ளடக்கப்பட்டது.


இராணுவ இலட்சினை

1937ஆம் ஆண்டு இலங்கை கடல் தொண்டர் கடற் படை தாபிக்கப்பட்டதுடன் 1950ஆம் ஆண்டு கடற்படை சட்டத்தின் மூலம் இலங்கை கடற்படை தாபிக்கப்பட்டது பின்னர் அது ''ஸ்ரீலங்கா கடற்படை'' எனப் பெயர் மாற்றப்பட்டது.



கடற்படை இலட்சினை

1951ஆம் ஆண்டு விமானப்படைச் சட்டத்தின் மூலம் இலங்கை விமானப்படை தாபிக்கப்பட்டது. 1972ம் ஆண்டிற்குப் பின்னர் ''ஸ்ரீலங்கா விமானப்படை'' என மாற்றப் பட்டது.

இலங்கைவான்படை இலச்சினை

பாதுகாப்புப் படையினர், தரை, கடல் மற்றும் வான்பரப்பைப் பாதுகாத்து சமூகத்திற்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களில் இருந்து சமூகத்தைப் பாதுகாப்



கடற்படை இராணுவப்படை விமானப்படை

உரு 7.8

பாதுகாப்புப் படையினர் சமூகப்பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக உயிரைத் துச்சமாக மதித்துப் போராடும் விதத்தை நீங்கள் நன்கு விளங்கியிருப்பீர்கள்.

சமூகப்பாதுகாப்பிற்கெனப் பாதுகாப்புப் படையினர் மூலம் பொதுவாக மேற்கொள்ளப்படும் பணிகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்த முடியும்.

- உள்நாட்டு மோதல்கள் மற்றும் யுத்த நிலைமைகளைக் கட்டுப்படுத்தல்.
- வெளிநாடுகளில் இருந்து ஏற்படக்கூடிய யுத்த நிலைமைகளிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல்.
- உள்நாட்டில் ஏற்படக்கூடிய பல்வகையான கிளர்ச்சிகளின்போது அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொலிசாருக்கு உதவுதல்.
- நாட்டினுள் உள்ள பௌதிக மற்றும் மனிதவளத்தைப் பாதுகாக்க பொலிசாருக்கு உதவுதல்.
- திடீர் அனர்த்தங்களின்போது நிவாரண சேவைகளை வழங்குதல்.


இலவச பாடநூல் விநியோகத்திற்காக

- வேலைநிறுத்தங்களின்போது அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்காக உதவுதல்.
- வைபவங்களின்போது அணிவகுப்பை நடாத்துவதன் மூலம் அவற்றைக் கவர்ச்சிகரமாக்குதல்.
- யுத்தத்தினால் இடம்பெயர்ந்தோரின் நாளாந்த தேவைகளை நிறைவுசெய்ய உதவுதல்.


உரு 7.9 அனர்த்த நிலைமைகளின் போது நிவாரணப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடல்

இவற்றுக்கு மேலதிகமாக ஸ்ரீலங்கா கடற்படையினர் கடற்பரப்பிலும் ஸ்ரீலங்கா விமானப்படையினர் வான் பரப்பிலும் இலங்கையின் பாதுகாப்பினை உறுதிசெய்ய விசேட கடமைகளை மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் பயங்கரவாதப் பிரச்சினைகள் உக்கிரம் அடைந்தவுடன் பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக பிரதேச மட்டத்தில் பொலிஸ் நிலையங்களுடன் இணைந்த ஊர்காவல் படை ஒன்று தாபிக்கப்பட்டது. தற்பொழுது அது சிவில் பாதுகாப்பு படை எனும் பெயரில் தனியான அலகாகச் செயற்பட்டு வருகின்றது.

**செயற்பாடு III**

உங்களது இருப்பிடத்திற்குக் கிட்டிய பொலிஸ் நிலையத்திற்குச் சென்று சிவில் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பற்றி அறிந்து அதனைப் பட்டியலப்படுத்துங்கள்.

## 7.7 சமூகப்பாதுகாப்புடன் பிணைந்துள்ளதனிப்பட்டோரின் பொறுப்புக்கள்

சமூகப்பாதுகாப்பை உருவாக்கும் பிரதான காரணியாக அமைவது தனி மனிதனாகும். இதற்குக் காரணம் சமூகமுறைமையினுள் காணப்படும் சகல ஒழுக்கவிழுமியங்கள் , சட்ட திட்டங்கள், அமைப்புக்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புகள் தனிமனிதனை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளமையினாலாகும்.தனிமனிதன் சமூகப்பாதுகாப்பின் மீது கவனம் செலுத்தாதிருப்பின், அல்லது இதன்படி செயற்படுவதை நிராகரிப்பானாயின் அவனின் சமூகப்பாதுகாப்பு முறிவடையும்.

சமூகப்பாதுகாப்பை ஏற்படுத்துவதில் தனிமனிதர் ஒவ்வொருக்கும் பாரிய பொறுப்புக்கள் உள்ளன. அவற்றில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

* அரசினால் விதிக்கப்பட்டுள்ள மற்றும் விதிக்கப்படும் சட்ட திட்ட ஒழுங்குகளுக்குக் கட்டுப்படல் மற்றும் அவற்றை மதித்தல்.
* தம்மால் மேற்கொள்ளப்பட வேண்டிய பொறுப்புக்களை இனங்காணலும்மற்றும் அவற்றை நிறைவேற்றுதலும்.
* நாட்டின் சட்டம் மற்றும் சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்புத் தரப்பினருக்கு உயர்ந்தபட்ச ஒத்துழைப்புக்களை வழங்குதல்.
* தான் மற்றும் தம்மைச் சூழ உள்ள சமூகத்தின் பாதுகாப்புத் தொடர்பாக தொடர்ந்து விழிப்புடன் இருத்தல்.
* சமூகப்பாதுகாப்பு முறியடிக்கப்படும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக உரிய தரப்பினரை அறிவுறுத்தல்.
* பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிசாரை கௌரவித்தலும் அவர்களின் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதலும்
* சமூக மற்றும் கலாசாரப் பெறுமதிகள், ஒழுக்க விழுமியங்கள், சம்பிரதாயங்களை மதித்தல் மற்றும் அவற்றைப் பாதுகாத்தல்.
* இளம் பரம்பரையினருக்கு முன்மாதிரியாகச் செயற்படல். மற்றும் அவர்களுக்கு சமூகத்தின் பெறுமதிகள் தொடர்பாகப் பயிற்சியளித்தல்.
* சமூகத்தின் பல்வேறுபட்ட அமைப்புக்களின் உறுப்பினராகச் செயற்படல் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

இவ்வாறான பொறுப்புக்களை உரியவாறு மேற்கொள்வதன்மூலம் தனிப் பட்ட பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதுடன் அதனூடாகச் சமூகப் பாதுகாப்பையும் ஏற்படுத்த முடியும்.

சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துவதில் பல்வேறுபட்ட சமூக முறைமைகள் காரணிகளாக அமைகின்றன. பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் சமூக அமைப்புக்களை உரியவாறு அமுல்படுத்துவதில் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். மக்கள் மூலம் சமூகம் பாதுகாக்கப்படுவதைப் போன்று சமூகமும் பாதுகாக்கப்படும் பட்சத்தில் தனிநபரின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும் என்பதை மனதிற் வைத்துக் கொள்ள வேண்டும்.


**செயற்பாடு IV**

சமூகப்பாதுகாப்பு ஏற்படுத்துவதில் பாடசாலை மாணவர் என்ற வகையில் உங்களால் செய்யக்கூடியவற்றை குறிப்பிடுங்கள்.

## 7.8 : சமூகப்பாதுகாப்பு முறிவடைவதற்கான காரணிகள்

சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்க விழுமியங்களுக்குப் புறம்பாக ஒரு நபர் அல்லது குழு செயற்படுவதாயின் அதன் மூலம் சமூகப்பாதுகாப்பிற்கு பாதிப்புக்கள் ஏற்படக் கூடும். உதாரணமாக மரணச் சடங்கின்போது அல்லது திருமணத்தின்போது பின்பற்றும் சம்பிரதாயங்களுக்குப் புறம்பாக செயற்படுவதன் மூலம் சமூகத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதைக் காண முடிகிறது.

சமூகப்பாதுகாப்பு முறிவடைவதற்கான காரணங்கள் கீழே குறிப் பிடப்பட்டுள்ளன.




சமூகப்பாதுகாப்பு முறிவடையும் பட்சத்தில் அது தனிநபர்களது பாதுகாப்பிற்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதால் சமூகப்பாதுகாப்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பது சகலரினதும் பொறுப்பாகும்.

## 7.9: சமூகப்பாதுகாப்புமீது பங்களிப்புச் செய்யும் நிறுவனமாக "கூட்டுறவு இயக்கம்"

பண்டையக் காலத்து இலங்கை மக்கள் பொருளாதார கலாசார மற்றும் சமய நடவடிக்கைகளின்போது ஒத்துழைப்புடன் செயற்பட்டார்கள் என்பது நீங்கள் அறிந்த விடயமாகும். விவசாய நடவடிக்கைகளின்போது இதனை விசேடமாகக் காணக்கூடியதாக இருந்தது. கூட்டு வேலை, சிரமதானம் போன்றன இதற்கான உதாரணங்களாகும். வீட்டுக்கூரைகளை அமைத்தல், சமய நிகழ்ச்சிகள், வயல் அறுவடை போன்ற நடவடிக்கைகளின்போது ஒவ்வொருவரும் இணைந்து உதவுபவர்களாக விளங்கினர். நாம் ஒத்துழைப்புடன் இணைந்து செயற்படுவதன் மூலம் கூட்டுறவுப் பண்புகள் விருத்தியடைகின்றன.

கூட்டாக இணைந்து செயற்படல். பரஸ்பர நல்லுறவுடன் உதவுதல் என்பன கூட்டுறவு முறைமையின் அடையாளங்களாகக் கருத முடியும். கூட்டுறவு இயக்கத்தின் தந்தையாகக் கருதப்படும் ரொபட் ஒவானின் வரைவிலக்கணம் மூலமும் இது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

> பொருளாதார அபிவிருத்திக்காக மக்களிடையே காணப்படும் போட்டிக்குப் பதிலாக ஒத்துழைப்பு மற்றும் விழுமியங்கள் கொண்ட சிறந்த சமூகச் சூழலை அடிப்படையாகக் கொண்ட வேலை கூட்டுறவு இயக்கமாகும்.
>
> \- ரொபட் ஒவன்-

சமூகத்தில் போட்டிக்குப் பதிலாக கூட்டாக இணைந்து இயங்குவதனை விருத்தி செய்வது கூட்டுறவு இயக்கத்தின் விசேட பண்பாகும்.

**"ஒருவருக்காக பலர் பலருக்காக ஒருவர்" என்பது கூட்டுறவு இயக்கத்தின் மகுட வாசகமாகும்.**




உரு 7.10 கூட்டுறவு இயக்க இலட்சினை

**செயற்பாடு IV**

கூட்டுறவு இயக்கத்தில் காணப்படும் பண்புகளை அறிந்து பட்டியற் படுத்துங்கள்.

## 7.10 கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி

1771ஆம் ஆண்டில் பிரித்தானியா வேல்ஸ் பிரதேசத்தில் நிவ்டவுன் என்ற இடத்தில் பிறந்த ரொபட்ஒவன் கூட்டுறவு இயக்கத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார். தொழிற்சாலை உரிமையாளரான அவர் தமது ஊழியர் களுக்காக கூட்டுறவு முறைக்கேற்ப நுகர்வோர் சேவையொன்றை மேற் கொண்டார். இதனைக் கூட்டுறவு இயக்கத்தின் ஆரம்பமாகக் கருத முடியும்.

அதன் பின்னர் இங்கிலாந்து லன்கேஷியர் ரொச்சேல் மாகாணத்தில் தொழிலாளர்களினால் நிவாரண விலைகளில் பொருட்களை விநியோகிப்பதற்காக சங்கம் ஒன்று தாபிக்கப்பட்டது. அது ரொச்சேல் முன்னோடிகளின் சங்கமாகக் கருதப்பட்டது. அது உலகின் முதலாவது கூட்டுறவு சங்கமாகக் கருதப்படுகின்றது.

இலங்கையிலும் கிராமிய மக்கள் வறுமை மற்றும் கடன் சுமையில் பாதிக்கப்பட்டுள்ளமையினால் இதற்குத் தீர்வு காண்பதற்காக 1909ஆம் ஆண்டில் அப்போதைய ஆங்கில ஆட்சியாளரால் குரோபட் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இதன்மூலம் இந்தியாவில் அமுலில் உள்ள கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்க முறைமையை இலங்கையில் அறிமுகப்படுத்தவேண்டும் என அது பரிந்துரை செய்தது.

இதற்கேற்ப முதலாவது தாபிக்கப்பட்ட முறை சார்ந்த கூட்டுறவுச் சங்கம் காலி மாவட்ட வரையறுக்கப்பட்ட வல்லபடபத்து கூட்டுறவு கடன் வழங்கும் சங்கமாகும்.

இலங்கையில் கூட்டுறவு இயக்கம் சமீபகாலத்தில் பல்வேறுபட்ட நவீனமயப் படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டன.



உரு 7.11



உரு 7.12 கூட்டுறவு வியாபார நிலையம்

**செயற்பாடு V**

இலங்கை கூட்டுறவுத் துறையில் சமீபகாலத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் பட்டியற்படுத்துங்கள்.

ஆரம்பத்தில் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்பொழுது பல்வேறுபட்ட கூட்டுறவுச் சங்கங்கள் காணப்படுகின்றன. இவற்றில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
- சிக்கன கடன் வழங்கும் சங்கம்.
- விவசாய மற்றும் சூழல் வளச் சங்கம்.
  உ-ம்:- தேயிலை, றப்பர், தெங்கு, கடற்றொழில், விவசாய, மிருக வளர்ப்பு
- கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம்
  உ-ம்:- புடவை, தச்சு, தும்பு, ஆடைத்தொழில்
- வைத்தியசாலைச் சங்கம்
- போக்குவரத்துக் கூட்டுறவுச்சங்கம்.
- பாடசாலைக் கூட்டுறவுச்சங்கம்.

1995ஆம் ஆண்டில் சர்வதேசக்கூட்டுறவு அமைப்பினால் கூட்டுறவு இயக்கம் தொடர்பாக 7 கொள்கைகளும் 8 விழுமியங்களும் அறிமுகப் படுத்தப்பட்டன.

| கொள்கைகள் | விழுமியங்கள் |
|---|---|
| 1. திறந்த மற்றும் தன்னார்வ அங்கத்துவம் | ★ சுய சக்தி<br>★ தனியாள் பொறுப்பு |
| 2. ஜனநாயக நிர்வாகம் | ★ ஜனநாயக நிர்வாகம் |
| 3. அங்கத்துவ பொருளாதாரப் பங்களிப்பு | ★ சமத்துவம் |
| 4. இறைமையும், சுதந்திரமும் | ★ நியாயம்<br>★ ஒத்துழைப்பு |
| 5. கல்வி, பயிற்சி மற்றும் அறிவு | **நற்பண்புகள்** |
| 6. கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஒத்துழைப்பு | ★ நேர்மை<br>★ திறந்த தன்மை |
| 7. சமூகத்தின்பால் கவனஞ் செலுத்துதல் | ★ சமூகப் பொறுப்பு<br>தொடர்பாகக் கவனம் செலுத்த |

இக்கொள்கைகள் ஒழுக்க விழுமியத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளன. கூட்டுறவுத் திட்டம் தற்பொழுது சமூகத்தின் பல்வேறு துறைகளில் தாபிக்கப்பட்டுள்ளதை மேற்படி ஆக்கங்களிலிருந்து உங்களால் உணரமுடியும்.

## 7.11 பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம்




கூட்டுறவு இயக்கம் முதலில் கடன் வழங்குதல் போன்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டில் இவ்வாறான 70 வகையான சங்கங்கள் காணப்பட்டன. அப்போதைய உணவு மற்றும் விவசாய அமைச்சர் பிலிப் குணவர்த்தன அவர்களினால் இச்சங்கங்களுக்குப் பதிலாக பல்வேறுபட்ட சேவைகளை மேற்கொள்ளக் கூடியவாறு கூட்டுறவுச்சங்க முறைமை மீள்கட்டமைக்கப்பட்டது. அச்சங்கம் பல்நோக்கு கூட்டுறவுச்சங்கம் எனப்பட்டது.

பல்நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் பிரதான நோக்கம் கூட்டுறவு கொள்கைக்கமைய அங்கத்தவர்களின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார அபிவிருத்தியை ஏற்படுத்தி அங்கத்தவர்களிடையே சிக்கன, சுய உதவி மற்றும் பரஸ்பர உதவிகள் தொடர்பான உணவு மற்றும் பண்பாடுகளை அபிவிருத்தி செய்வதாகும் என்று பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் இடைக்கால யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்நோக்குக் கூட்டுறவுச்சங்கத்திக்கான அங்கத்துவத்தை 18 வயதை எட்டியுள்ள அப்பிரதேசத்தில் வசிக்கும் எவருக்கும் பெற்றுக்கொள்ள முடியும். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் நிர்வாகத்திற்காக அங்கத்தவர்களிலிருந்து தலைவர் உட்பட பணிப்பாளர் சபையும் நிறைவேற்றுப் பணிகளுக்காகச் சங்கத்தின் அலுவலராக பொது முகாமையாளர் ஒருவரும் தெரிவு செய்யப்படுவார்.

பல்நோக்கு கூட்டுறவுச் சங்கமொன்றின் நிர்வாக ஒழுங்கமைப்புக் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரிப்படத்தின் மூலம் தெளிவுபடுத்த முடியும்.




தற்பொழுது பல்வேறான பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் நாட்டில் உள்ளன. 2005ஆம் ஆண்டளவில் 9662 கூட்டுறவு சங்கங்கள் காணப்பட்டன. அவற்றில் 305 பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாகும். இவை மேற்கொள்ளும் சேவைகள் பல உள்ளன. அவற்றில் சில பிரதான செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக நீங்கள் அறிந்த மேலும் பல சேவைகளைப் பற்றித் தேடியறிந்து கொள்ளுங்கள்.

- வாடிக்கையாளர் சேவை
- வங்கிச்சேவை
- அடகுச்சேவை
- கட்டடப் பொருட்கள் விற்பனை
- விவசாய உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல்
- சுயசேவை விற்பனை நிலையம்
- பால் விற்பனை / உணவகம்
- எரிபொருள் விநியோகம்
- அச்சக சேவை
- சுற்றுலா ஹோட்டல்
- போக்குவரத்துச் சேவை
- முகவர் தபாலகம்
- வைத்தியசாலை
- கல்விச்சேவை
- மரணச் சடங்குச் சேவை
- காப்புறுதிச் சேவை

- தொடர்புச்சாதன நிலையம்
- பாலர் பாடசாலை
- ஒசுசல மருந்தகம்

## 7.12 கூட்டுறவு பிரதேசக்கிளை

பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் தமது சேவைகளைக் கிராமிய மட்டத்தில் மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நிறுவனம் கூட்டுறவுப் பிரதேசக் கிளையாகக் கருதப்படுகின்றது. உங்களது பிரதேசத்திலும் இவ்வாறான நிறுவனம் உள்ளதா? சகல பிரதேசக் கிளைகளுக்கும் உரிய அதிகாரப் பிரதேசம் இருப்பதுடன் அதன் மூலம் 18 வயதை எட்டியுள்ள எவருக்கும் அங்கு அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கூட்டுறவுப் பிரதேசக் கிளை அங்கத்தவர்களினால் பிரதேச பொதுச் சபை மற்றும் செயற்குழு உருவாக்கப்படும். நிர்வாக நடவடிக்கைகள் பிரதேச முகாமையாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

பல்நோக்கு கூட்டுறவுச் சேவைச் சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நுகர்வுப் பொருள் விற்பனை இப் பிரதேச கிளைகள் மூலம் மேற்கொள்ளப் படுகின்றது. இதற்கு மேலதிகமாக சமுர்த்தி உதவி பெறுவோர்களுக்காக உணவுப் பொருள் விநியோகமும் இக்கிளைகள் மூலமே மேற்கொள்ளப்படுகின்றது.

**செயற்பாடு VI**

உங்களுக்கு அண்மையில் உள்ள பிரதேசக் கூட்டுறவு கிளைகளுக்குச் சென்று அவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் சேவைகளை அறிந்து கூட்டுறவு பிரதேசக் கிளைகள் தொடர்பாகப் பத்திரிகைக்குக் கட்டுரை ஒன்றை எழுதுங்கள்.

**சாராம்சம்**

* குறித்ததொரு பிரதேசத்தில் ஆட்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு கூட்டமாக வாழுகின்ற ஆட்தொகுதி சமூகம் எனப்படும்.

* சமூகநலனுக்காக அதன் நிலவுகையைப் பேணுவது சமூகத்தின் பாதுகாப்பாகும்.

* சமூகப்பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக மனித நடத்தைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது முக்கியமாகும்.

* குடும்பம், பாடசாலை, சமய நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்பு சமூகப்பாதுகாப்புமீது செல்வாக்கு செலுத்தும் பிரதான காரணிகளாகும்

* அரச செயற்பாட்டின்கீழ் பொலிசார் மற்றும் பாதுகாப்புப் படையினர் சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றனர்.

* ஒவ்வொருவருக்கும் உதவும் நோக்குடன் பல்வேறான கூட்டுறவு நிறுவனங்கள் சமூகத்தில் தோன்றிச் செயற்படுகின்றன.

* தற்பொழுது கூட்டுறவு ச் சேவைபல்நோக்கு கூட்டுறவுச் சேவையாக பரிணமித்துள்ளன.

**ஒப்படை**

1. உங்களது பிரதேசத்தில் சமூகப்பாதுகாப்பை ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் பண்புகள் எவை?
2. இலங்கையில் சமூகப்பாதுகாப்புச் சீர்குலைவதற்கான காரணங்கள் எவை? அவற்றை எவ்வாறு தவிர்க்கலாம்?
3. இலங்கையில் கூட்டுறவு மூலம் வழங்கப்படும் சேவைகள் எவை?
4. உங்களது பிரதேசத்தில் பல்நோக்கு கூட்டுறவு சேவை தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றி கீழ்க் குறிப்பிடப்படும் தலைப்பின் கீழ் கையேடு ஒன்றைத் தயாரியுங்கள்.
    * ஆரம்பம்
    * ஒழுங்கமைப்பு
    * ஆற்றப்படும் பணிகள்
    * தற்பொழுதுள்ள குறைபாடுகள்